| சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம் | |
|---|---|
| நாள் | 10.06.2024 |
| O.S. No. | 176/2021 |
| வா..சா.1 | சுந்தரராஜன் (Bank of Baroda) |

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் வாதி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

பெயர் : சுந்தரராஜன் சமயம் :

தந்தை பெயர் ; தொழில் :

கிராமம் : வயது :

தாலூக்கா :

முதல் விசாரணை -

நான் இவ்வழக்கின் வாதியான வங்கியின் முதன்மை மேலாளராக பணிபுரிகிறேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 04.11.2013 ம் தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் அசல் வா.சா.ஆ-1, 06.11.2013 ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதத்தின் அசல் வா.சா.ஆ-2, 28.11.2013 ம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசல் வா.சா.ஆ-3, 28.11.2013 ம் தேதியிட்ட உறுதிமொழி கடிதத்தின் அசல் வா.சா.ஆ-4, 28.11.2013 ம் தேதியிட்ட பிரகடனம் மற்றும் உறுதிமொழி ஆவணத்தின் அசல் வா.சா.ஆ-5, 28.11.2013 ம் தேதியிட்ட தவணைமுறை கடிதத்தின் அசல் வா.சா.ஆ-6, 28.11.2013 ம் தேதியிட்ட வருங்கால

வருமானத்தை ஒதுக்குவதற்கான வரைவு ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ-7, 28.11.2013 ம் தேதியிட்ட ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ-8, 25.10.2016 ம் தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதத்தின் அசல் வா.சா.ஆ-9, 22.5.2018 ம் தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதத்தின் அசல் வா.சா.ஆ-10, 11.02.2021 ம் தேதியிட்ட கடன் ஒப்புதல் கடிதத்தின் அசல் வா.சா.ஆ-11, 13.07.2021 ம் தேதியிட்ட வழக்குரைஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ-12, 15.07.2021 ம் தேதியிட்ட அஞ்சலக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டதற்கான இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(b) உடன் இணைந்த கணினி நகல் வா.சா.ஆ-13, 08.07.2021 ம் தேதியிட்ட கணக்கு பட்டியலின் கணினி நகல் வா.சா.ஆ-14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.